கொரில்லா குரங்குகளுடன் போராடும்
இந்திய
டார்ஜான்

ராணி காமிக்ஸ் – 423
(மாதம் இருமுறை இதழ்)

பிப்ரவரி 1 – 15
2002

இந்திய டார்ஜான்

கிங்காங்

காட்டில் ஒரு நாள்...
தைமூர்! மரத்து உச்சியைப் பார்! அங்கே என்ன தெரிகிறது?
..இங்காங் வளர்க்கும் கழுகு "தைமூர்."
ஒன்றும் இல்லையே!
நன்றாகப் பார்! ஒரு பழம் தெரிகிறதா? அது மிகவும் சுவையான பழம்!
அந்தப் பழத்தைப் பறித்து வா! எனக்குப் பசிக்கிறது!

கொஞ்சம் பொறு! நீயும் பற! நானும் தாவுகிறேன். யார் முதலில் பழத்தைப் பறிக்கிறார் என்று பார்ப்போம்!
கிங்காங் தாவிக் குதித்தான்! தைமூர் மேல்நோக்கிப் பறந்தது!
கிங்காங் புயல் வேகத்தில் பாய்ந்து, பழத்தைப் பறித்தான்!

உனக்கும் பசிக்கிறதா? இந்தப் பழத்தை சாப்பிட்டுப் பார்க்கிறாயா?
அடடா! பழம் எவ்வளவு சுவையாக இருக்கிறது!
ஆனால், தைமூர் துப்பிவிட்டது!
உனக்குப் பிடிக்கவில்லையா? வேண்டாம்!

ஆ ! நிறையக் கொட்டைகள் கிடக்கின்றன ! யார் பழம் தின்றது?

ஓ ! கால் தடம் !!

இங்காங், கால் தடத்தைத் தொடர்ந்து வந்தான்.
எவ்வளவு பெரிய தடம்! மனிதத் தடம் போல இல்லையே?
இது யாரது கால் தடம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமே!
இங்காங் காத்திருந்தான்.
ஒரு ஈ, காக்கா கூட வரவில்லை! தலைவரிடம் கேட்டால் தெரியுமே?

ஆதிவாசிகளின் தலைவனை சந்திக்கச் சென்றான்.
இங்கே புது ஆட்கள் யாரும் வந்தார்களா?
இல்லையே! ஏன்?
மரத்தடியில் சில வித்தியாசமான கால் தடம் பார்த்தேன். பழம் தின்று கொட்டை போடப்பட்டிருந்தது.
காட்டு மிருகங்களின் கால் தடமா?
இல்லை! எனக்குத் தெரியாதா? முற்றிலும் வேறுபட்டது!


தலைவன் யோசித்தான்.
பக்கத்துக் காடுகளிலிருந்து யாரும் வந்திருப்பார்களோ?
அப்படியும் தெரியவில்லை!
எப்படிச் சொல்லுகிறாய்?

அவர்கள் கூட்டமாக வருவார்கள். ஆனால், ஒரே தடந்தான் இருக்கிறது!

அப்படியா? யாராக இருக்கும்!
உம்... நான் கண்டு பிடிக்கிறேன்!

யாரோ வந்து பழம் தின்று விட்டுப் போயிருப்பார்கள். உனக்கு ஏன் சிரமம்?
எனக்கு சிரமமில்லை. இதெல்லாம் ஒரு விளையாட்டு!
சிங்காங் தனிமையில் அமர்ந்து சிந்தித்தான்.
மிருகங்கள் இந்தப் பழத்தை சாப்பிடுவது இல்லை. வேறு யாராக இருக்கும்?
எனக்குத் தெரியாமல் இந்தக் காட்டுக்குள் யாரும் வரமுடியாதே!

இங்காங் மீண்டும் மரத்தைத் தேடிப் போனான்.
மரம் எங்கே... இங்கேதானே இருந்தது?
ஓ... அதோ இருக்கிறது!
இங்காங் மரத்தடியில் நின்று பார்த்தான்!


இந்த மரம் இங்கே இருப்பது யாருக்கும் தெரியாதே! யார் வந்திருப்பார்?

கால் தடம் இருந்ததே, எங்கே? மாயமா மறைந்து விட்டதா!

எல்லாம் ஓரே மர்மமாக இருக்கிறதே!

அதிசயமா இருக்கிறதே!
விதைகளையும் காணோம்!!
கிங்காங் சுற்று முற்றும் பார்த்தான்.
மரம் செடி கொடி தவிர வேறு எதுவுமில்லை!
இன்று இரவு இங்கேயே தங்கிவிட வேண்டியதுதான்


கிங்காங் மரத்தில் ஏறினான்.
நான் மறைந்து கொள்ள வேண்டும்.
கொடிகளைக் கொண்டு ஒரு படுக்கை தயார் செய்து கொண்டான்.
இங்கே இருந்து பார்த்தால் பழம் தெரிகிறது!
திடீர் என்று ஒரு ஓசை கேட்டது.
யாரது?
தைமூர் பறந்து வந்தது.
உன் உதவியும் தேவைதான்!

இரவு யாராவது பழம்
தின்ன வருகிறார்களா
என்று பார்க்க வேண்டும்.
நீயும் என்னுடன் இரு!


இங்காங் தூங்கிவிட்டான்!

கிளைகள் அசைய விழித்துக்கொண்டான்.
ஏன் கிளைகள் ஆடுகின்றன?
புயலா...? இல்லையே!
நான் இங்கே இருப்பதைத் தலைவருக்குத் தெரியப்படுத்த வேண்டுமே?

கிங்காங் ஒரு இலையைப் பறித்து எழுதினான்.
தைமூர்! இங்கே வா!
இதைக் கொண்டுபோய் தலைவரிடம் கொடு!
தைமூர் பறந்து சென்றது.
நள்ளிரவு... ஒரே இருட்டு! இருளிலும் பார்க்கக்கூடிய ஆற்றல் கிங்காங்குக்கு உண்டு.


பழத்தைப் பார்த்தபடியே கிங்காங் படுத்திருந்தான்.

திடீர் என்று சருகுகள் மிதிபடும் சத்தம் கேட்டது..

கிங்காங் எழுந்து சுற்று முற்றும் பார்த்தான்.
யாரது?

கிளைகளும் ஆடின!
யாரோ வருகிறார்கள் என்று நினைக்கிறேன்!
இருளில் இரு கண்கள் மட்டும் பளிச்சென்று தெரிந்தன!

யார் அவன்?
இரவில் ஏன்
இங்கே வருகிறான்?
கொரில்லா...
மனிதக்குரங்கு!
இங்காங் கூர்ந்து
பார்த்துக்
கொண்டிருந்தான்!

கொரில்லா மரத்தை ஆட்டியது!
பழத்தை உதிர்க்கிறதா?
பழம் உதிர்ந்தது!
கொரில்லா எடுத்துத் தின்றது! விதைகளைத் துப்பியது!
விதைகள் காய்ந்ததும் வந்து எடுத்துக்கொள்ளுமோ?
பழத்தை சாப்பிட்டு விட்டது. இனி என்ன செய்யும்?
கொரில்லா திரும்பிச் சென்றது!
எங்கே இருந்து வந்தது! எங்கே போகிறது?
பின்தொடர்ந்தான்!


இந்தக் காட்டில் நான்
பார்த்ததேயில்லையே! எங்கு
வசிக்கிறது?


சிறிது தூரம் போய், கொரில்லா நின்றது.
இங்கேதான்
இருக்கிறதா?

திடீர் என்று படீர் என்று ஒரு சத்தம்!
கொரில்லாவைக் காணோம்!! எங்கே போயிற்று?
மரத்துக்குப் பின்னே மறைந்துகொண்டதா?
தேடிப் பார்ப்போம்!


இந்த இடத்தில்
தானே நின்றது?

நான் வருவது
தெரிந்து எப்படியோ
மறைந்துவிட்டது!

மாயமா மந்திரமா !
எப்படி மறைய முடியும்?

இந்த மர்மத்தை எப்படியும் கண்டுபிடித்தே தீரவேண்டும்!

கிங்காங் ஒரு குச்சியை நாட்டினான்.
இந்த இடத்தில்தானே மறைந்தது?


கிங்காங் திரும்பினான்.
ஆச்சரியமாக இருக்கிறதே! இப்போது கால் தடம்கூட இல்லை!!

எல்லாம் மாயமாக இருக்கிறது! கண்டுபிடித்தே தீரவேண்டும்!
இங்காங் ஊஞ்சலாடி விரைந்தான்.
தலைவரிடம் என்ன சொல்லுவது?

இந்நேரம் தலைவர் தூங்குவார்.
காலையில் பார்த்துக் கொள்ளுவோம்!

மர்மத்தைக் கண்டுபிடிக்காமல் எனக்குத் தூக்கம் வராது. கொரில்லா எங்கே இருந்து வருகிறது? எங்கே போகிறது?

திடீர் என்று ஒரு சத்தம் கேட்டது! இங்காங் எழுந்து, சுற்றுமுற்றும் பார்த்தான்.
யாரது?
ஓ! கொரில்லா!!
ஏன் மீண்டும் வந்திருக்கிறதா? என்னைத் தேடியா? என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!

இங்காங் மீண்டும் படுத்துக்கொண்டான்.
என்னை நோக்கித்தான் வருகிறது? எதுக்காக?

இங்காங் தூங்குவது போலக் கண்களை மூடிக்கொண்டான். கொரில்லா அருகே வந்தது. இங்காங் முகத்தில் காற்றை ஊதியது!

இங்காங் மயங்கிப் போனான். கொரில்லா
அவனை தூக்கிச் சென்றது!


ஒரு மாளிகையில் கொண்டுவந்து படுக்க வைத்தது!
இங்காங் மயக்கம் தெளிந்து எழுந்தான்!

நான் எங்கே இருக்கிறேன்? இது எந்த இடம்?
அரண்மனை போல இருக்கிறது... யாரையும் காணோம்...
தைமூர்... தைமூர்...
கிங்காங்குக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு வந்தது.
கொரில்லா வந்தது... என் முகத்தில் ஊதியது...

இங்காங் எழுந்தான். நடந்தான்.
பழைய அரண்மனை போலத் தெரிகிறது!
திடீர் என்று ஒரு பயங்கர சத்தம் கேட்டது!
யாரோ வருவது போலிருக்கிறது!
ஒரு சுவர் நகர்ந்தது! அங்கே கொரில்லா நின்றுகொண்டிருந்தது!
அதே கொரில்லா!

கொரில்லா சைகை செய்ய, இங்காங் அதனபின் நடந்தான்!
எங்கே அழைத்துப் போகிறது?
ஒரு அறையில் வந்து நின்றது.
இதுதான் இவர்களின் தலைவனின் அறையோ!
கை தட்டும் ஓசை கேட்டது. இங்காங் திருமபிப் பார்த்தான்.
யாரது?
தலைவனைப் போன்ற ஒரு கொரில்லா. அரியணையில் அமர்நதிருந்தது.
இந்திய டார்ஜானே! வருக! வருக!!

!
நான்தான் பேசுகிறேன்!
கொரில்லா பேசுகிறதா? ஆச்சரியம்!
ஆச்சரியப்படாதே! உன் முன் அமர்ந்திருக்கும் என்னைப் பார்த்த ஞாபகம் இருக்கிறதா?


பழம் தின்றது
நீதானே?
இல்லை!
என் நண்பன்!

ஒருமுறை காட்டு
வெள்ளம் உன்னை
அடித்துப்போயிற்று.
நினைவு இருக்கிறதா?


இங்காங்குக்குப் பழைய நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

அப்போது ஒரு விஞ்ஞானி உன்னைக் காப்பாற்றினார் அல்லவா?

அந்த விஞ்ஞானியின் உதவியாளராக ஒரு கொரில்லா இருந்ததே, நினைவிருக்கிறதா?
கிங்காங்குக்கு நினைவு வந்தது.
ஓ... நினைவிருக்கிறது.
டாக்டர் இக்ரஸ் இறந்துவிட்டார். நான்தான் ரெங்கன்.
டாக்டர் இக்ரஸ்... ரெங்கன்!

ரெங்கன்...
ரெங்கன்
கொரில்லா.

அதே
ரெங்கன்தான்
நான். இங்காங்!
மேலே பார்!

கிங்காங் பார்த்தான். ஒரு ஒலிபெருக்கி இருந்தது.
அதன் வழியேதான் நான் பேசுகிறேன். நான் பேசவில்லை... என் மனம் பேசுகிறது!
மனம் பேசுகிறதா?
ஆமாம்! கொரில்லா பேசாது! ஆனால், கொரில்லாவுக்கு மனம் இருக்கிறது! அது பேசும்!
என் மனம் பேசுவதை வெளிப்படுத்த, இந்த ஒலிபெருக்கியை டாக்டர் இக்ரஸ் கண்டுபிடித்தார்!

நான் ஒரு கொரில்லா என்பதை உன்னால் நம்பமுடிகிறதா?
டாக்டர் இக்ரஸ் கூறியதை கிங்காங் நினைத்துப் பார்த்தான்.
கிங்காங்! எனக்கு உதவியாளராக இருப்பவர் உண்மையில் குரங்கு அல்ல; மனிதன். என் ஆராய்ச்சியால் அவரைக் கொரில்லா ஆக்கினேன்!
நானும் உன்னைப் போல ஒரு மனிதனாகத்தான் இருந்தேன். டாக்டர் இக்ரஸ் என்னை கொரில்லா ஆக மாற்றி விட்டார்!

என்னை மீண்டும் மனிதன் ஆக்க அவரால்தான் முடியும். ஆனால், அவர் திடீர் என்று இறந்துவிட்டார்!
கிங்காங்! அந்த அரியணையில் நீ உட்கார். உனக்காகவே செய்யப்பட்டது, அது.
என்னை ஏன் இங்கே கொண்டு வந்தீர்கள்?
காரணம் இருக்கிறது.

அதுவும் மர்மமா!
என்னைப் போன்ற ஏராளமான கொரில்லாக்கள் அரண்மனையில் இருக்கிறார்கள்.
அரண்மனையிலா?
ஆமாம். டாக்டர் உருவாக்கிய கொரில்லா அரண்மனை.

இதுதான் அந்த அரண்மனை!
இது எங்கே இருக்கிறது?
நீ என்ன நினைக்கிறாய்?
ஏதோ ஒரு தீவில் என்று!
இல்லை!
பின்னே?

உங்கள் காட்டுக்குக் கீழே அமைந்துள்ள பாதாள அரண்மனை, இது!
பாதாள அரண்மனை!
ஆமாம். ஒரு வெடிச் சத்தம் கேட்டால், நாங்கள் எல்லோரும் எச்சரிக்கை ஆகிவிடுவோம்!
சரி, என்னை இங்கே கொண்டு வந்தது ஏன்?
ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன். நாங்கள் விரும்பிச் சாப்பிடும் பழ மரம் எப்படித் தோன்றியது, தெரியுமா?
எப்படி?

டாக்டர் இக்ரஸ் உருவாக்கிய அதிசய மரம், அது.
எதுக்காக?
மனிதர்களை கொரில்லா ஆக்க அதன் விதைகள் பயன்படுகின்றன!
மெய்யாவா?
ஆமாம். அந்த விதைகளை தின்பவர்கள் கொரில்லா ஆகிவிடுவார்கள்!

நீ கூட அந்தப் பழத்தைத் தின்றாய் அல்லவா!
நில்! என்னைத் தொட்டால் சாம்பல் ஆகிவிடுவாய்! என் உடலில் மின்சக்தி இருக்கிறது!
நானும் கொரில்லா ஆகிவிடுவேனா?
மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன். மீண்டும் மனிதனை குரங்கு ஆக்குவது தான் டாக்டர் இக்ரஸ் ஆராய்ச்சி!

கிங்காங் அதிர்ந்தான்!
இது மனித குலத்துக்கே பெரிய ஆபத்து ஆயிற்றே!
நானும் கொரில்லா ஆகிவிடுவேனா?
ஆவேசப்படாதே, கிங்காங்! இது கொரில்லா அரண்மனை! இங்கே உன்னால் எதுவும் செய்ய முடியாது!
திடீர் என்று கொரில்லா மறைந்துவிட்டது!
இங்கே எல்லாம் மாயமாக இருக்கிறதே! டாக்டர் இக்ரஸ்சின் ஏற்பாடுதானா, இது?

இவர்களையெல்லாம் விடுவிக்காமல் நான் இங்கிருந்து போகக் கூடாது!
கொரில்லா மீண்டும் வந்தது.
கிங்காங்! என்னுடன் வா, அரண்மனையை சுற்றிக் காட்டுகிறேன்!
கொரில்லாவுடன் கிங்காங் சென்றான்.
முதலில் மர்மங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்!

இதுதான் டாக்டர் இக்ரஸ்சின் சோதனைக்கூடம்!
அங்கே பார், இங்காங்!
பார்த்த இங்காங் அதிர்ந்தான்!

அவன் உன்னைப் போல ஒரு மனிதன். அவன் எப்படிக் கொரில்லா ஆகிறான் என்பதைப் பார்!
அது உண்மையான கொரில்லா! மனிதனை அப்படி மாற்றுகிறேன், பார்!
இப்போது மாறுதல் நடந்து கொண்டிருக்கிறது!

இங்காங் வியப்புடன் பார்த்தான்!
சில நிமிடம் கழித்து...
அந்த மனிதன் இப்போது கொரில்லா ஆகிவிட்டான்!
மீண்டும் அவனை மனிதன் ஆக்க முடியுமா?

அது டாக்டர் இக்ரஸ்சால் தான் முடியும்!
அவர்தான் இறந்து போனாரே!
நான் தொடர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்! நாளை நான் யாரை கொரில்லா ஆக்கப் போகிறேன் தெரியுமா? உன்னைத்தான் இங்காங்! ஹ...ஹ...ஹா... இங்காங் கொரில்லா!
இங்காங், கொரில்லாவை அடித்து நொறுக்க நினைத்தான். அதற்குமுன்...
இங்கே எவ்வளவு கொரில்லாக்கள் இருக்கிறார்கள்?
என்னோடு வா, காட்டுகிறேன்!
!


ரெங்கன் ஒரு பட்டனை அழுத்தினான். ஒரு சுவர் விலகியது.
அங்கே பார் இங்காங்!

ஏராளமான கொரில்லாக்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன!
அவர்கள் மனிதர்களாக இருந்து கொரில்லா ஆனவர்கள், இதனால் என்மேல் கோபத்தில் இருககிறார்கள்!

மனிதர்களை ஏன் இப்படிக் கொரில்லா ஆக்குகிறாய்?

நான் கொரில்லா ஆகிவிட்டேன் அல்லவா? அதனால் என்னைப் போல எல்லாரையும் கொரில்லா ஆக்குகிறேன்!
எனக்கு உதவிக்கு ஆள் தேவை உன்னை கொரில்லா ஆக்கி, எனக்கு உதவிக்கு வைத்துக் கொள்ளப் போகிறேன்!
நாளைப் பொழுது விடியுமுன் தப்பியாக வேண்டுமே!

திடீர் என்று விளக்குகள் அணைந்தன. மின்சாரத்தை நிறுத்திவிட்டார்கள்.
இப்போது உன் அறையில் போய் இரு.
கிங்காங் அறைக்குத் திரும்பினான்.
நாளைமுதல் நீ கொரில்லா!
அதற்குத்தான் உன்னை இங்கே கொண்டுவந்தது.
இதுதான் நல்ல வாய்ப்பு! மற்றவர்களையும் விடுவிக்க வேண்டும்!

கிங்காங் ஒரு பட்டனை அழுத்தினான். உடனே ஒரு சுவர் நகர்ந்துகொண்டது.
திடீர் என்று விளக்கு எரிந்தது!
ரெங்கன் விழித்துக் கொண்டானோ? நான் வேகமாகச் செயல்பட வேண்டும்!
கிங்காங் பாய்ந்து ஓடினான்!

கொரில்லாக்களைத் திறந்துவிட வேண்டும்!
கொரில்லாக்கள் அடைபட்டிருந்த இடத்துக்கு வந்தான்!
இரும்புக் கதவு, எப்படித் திறப்பது?
ஆ! ரெங்கன் ஓடிவருகிறானே... ஒரே வழிதான் இருக்கிறது!
கிங்காங் இரும்புக் கம்பிகளை வளைத்து முறித்தான!

கொரில்லாக்கள் விடுதலை பெற்றன!
இனி பயமில்லை!

ரெங்கன் தனது ஆட்களுடன் வந்தான்!

கொரில்லாக்கள் மோதின!

சரியான போட்டி!
ஒரு கொரில்லா, ரெங்களை வீழ்த்தியது!
ரெங்கன் வீழ்ந்தால் எல்லாருக்கும் விடுதலை!
ரெங்களை வீழ்த்த மின் இணைப்புகளைத் துண்டிக்க வேண்டும்!

லிங்காங் ஒரு தடியை எடுத்து, எல்லாவற்றையும் அடித்து நொறுக்கினான்!
அடியோடு அழித்துவிட வேண்டும்! எல்லாம் காலி!

ரெங்கன் எங்கே?

கொரில்லாக்களிடம் கேட்டான்.
ரெங்கன் எங்கே?

ஓ! கொரில்லா பேசாது அல்லவா? நாமே தேடிப் பார்ப்போம்!

ரெங்கனும், அவனுடன் சேர்ந்த கொரில்லாக்களும் செத்து விழுந்து கிடந்தன!
செத்துத் தொலைந்தார்கள்! உயிரோடு இருந்தால், மனித இனத்தையே கொரில்லா ஆக்கிவிடுவார்கள்!

நாம் பாதாள அரண்மனையில் இருக்கிறோம். எப்படி வெளியே போவது?
ஒரு கொரில்லா நடந்தது.
ஓ! வெளியே போக இதுதான் வழியா
நான் மயக்க நிலையில் இங்கே கொண்டுவரப்பட்டதால், எனக்கு வழி தெரியவில்லை!

ஒரு இடத்தில் வழி முடிந்தது. ஒரு
ரில்லா மேல் கூரையை முட்டியது.
உடனே ஒரு கதவு திறந்தது!
ஓ! சுரங்கப் பாதை!
ங்கப் பாதை வழியே வெளியே வந்தார்கள்.
இதோ, எனது காடு வநதுவிட்டது! மிகவும் நன்றி! நீங்கள் இந்தக் காட்டிலேயே எனது நண்பர்களாக வசிக்கலாம்!
கொரில்லாக்கள் காட்டுக்குள் சென்றன.
மண்கொட்டி இந்த சுரங்கப் பாதையை மூடவேண்டும்.

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

Regd. with the Registrar of Newspaper for India under No. 42576/84 - ISSN 0971-8567
February 1, 2002.
RANI COMICS (TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்